பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 15

தமிழாக்குநர் உரை 19

முன்னுரை 21

பாடம் 1: மாதவிடாயின் விளக்கமும் அதன் உள்ளார்ந்த காரணமும் 25

பாடம் 2: மாதவிடாயின் வயது வரம்பும் தவணையும் 27

பாடம் 3: மாதவிடாயில் தற்செயலாக ஏற்படும் மாற்றங்கள் 41

பாடம் 4: மாதவிடாயின் சட்டங்கள் 48

பாடம் 5: தொடர் உதிரப்போக்கும் அதன் சட்டங்களும் 70

பாடம் 6: பிரசவத்தீட்டும் அதன் சட்டங்களும் 79

பாடம் 7: மாதவிடாயைத் தடுக்கும், அல்லது வரவழைக்கும் சாதனங்களைப் பயன்படுத்துதல் மற்றும் கருத்தடை அல்லது கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான சட்டங்கள் 86

முடிவுரை 91

பெண்களின் உதிரப்போக்கு, மாதவிடாய் சட்டங்கள் தொடர்பாக முக்கியமான சில மார்க்கத் தீர்ப்புகள் 94

பாடம் 1

மாதவிடாயின் விளக்கமும் அதன் உள்ளார்ந்த காரணமும்

❀

அகராதியில் 'ஹைழ்' என்பது ஒரு பொருள் வடிந்தோடுவதை அல்லது ஓடுவதைக் குறிக்கின்றது. மார்க்க அடிப்படையில் ஒரு பெண்ணுக்கு வெளிக்காரணங்கள் எதுவுமின்றி குறிப்பிட்ட காலத்தில் இயற்கையாக ஏற்படும் இரத்தப்போக்கையே ஹைழ் எனப்படும். இது நோய், காயம், கருச்சிதைவு, பிரசவம் போன்ற வெளிக்காரணம் எதுவுமின்றி இயற்கையாக வெளியாகும் இரத்தப் போக்கையே குறிக்கும். இந்த இயற்கையான இரத்தம் பெண்ணின் உடல்நிலை, சூழல், (வாழும் பிரதேசத்தின்) கால நிலைக்கேற்ப மாறுபடுவதும், ஒவ்வொருவருக்கும் மத்தியில் வேறுபாடுகள் காணப்படுவதும் இயல்பாகும்.

உள்ளார்ந்த காரணம்

தாயின் கருவறையில் உருவாகும் சிசுவிற்குத் தேவைப்படும் உணவை, சிசுவின்மீது மிகக் கருணையுள்ளவர்களால் கூட வெளியிலிருந்து வழங்க முடியாத நிலையில், அல்லாஹ்த் தஆலா பெண்களுக்கென்றே சில குருதிச் சுரப்பிகளை ஏற்படுத்தியிருக்க, அவற்றின் மூலம் தாயின் கருவறையிலுள்ள சிசுவிற்கான உணவு (அதனைச் சாப்பிட்டுச் சீரணிக்கின்ற தேவையும் இன்றி) இரத்த நாளங்களில் ஊடுறுவி, தொப்புள் கொடியூடாகவே சென்றடைகின்றது. ஒவ்வொரு சிசுவுக்கும் இவ்வாறே உணவளிக்கப்படுகின்றது. (இவ்வாறு படைத்த) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்கள் அனைவரிலும்) மிக அழகான படைப்பாளன். இதுவே மாதவிடாய் ஏற்படுவதற்கான உள்ளார்ந்த காரணமாகும். இதன் காரணமாகவே ஒரு தாய் கருவுற்றால் மாதவிடாய் தடைப்பட்டுவிடுவதைக் கவனிக்கலாம். கருவுற்ற ஒரு

பாடம் 2

மாதவிடாயின் வயது வரம்பும் தவணையும்

❀

இதனை பின்வருமாறு இரண்டு தலைப்புகளில் விவரிக்கலாம்:

1. மாதவிடாயின் பருவம் (ஆரம்பமாகும், முடிவுறும் வயது வரம்புகள்).
2. மாதவிடாயின் தவணை.

முதலாவது: மாதவிடாயின் பருவம்

பெரும்பாலும் ஒரு பெண்ணுக்கு 12 வயது முதல் 50 வயது வரையுள்ள பருவக் காலத்தினுள் மாதவிடாய் ஏற்படுவதே இயல்பாகும். சிலவேளை பெண்ணின் உடல்நிலை, சூழல், (வாழும் பிரதேசத்தின்) கால நிலைக்கேற்ப முன்கூட்டியே ஆரம்பமாகும், தாமதமாகி முடிவடையும் நிலைகளும் ஏற்படுவதுண்டு.

மாதவிடாய் ஆரம்பமாவதற்கோ, முடிவடைவதற்கோ குறிப்பிட்ட வயது வரம்பு உண்டா என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. 'மாதவிடாய் குறிப்பிட்ட வயதுக்கு முன்பு ஆரம்பமாகவோ, குறிப்பிட்ட வயதைத் தாண்டி முடிவுறவோ மாட்டாது. அவ்வாறு ஏற்படுமாயின் அதை நோயாகக் கணிக்க வேண்டுமே தவிர மாதவிடாயாகக் கணிக்கக் கூடாது' என்று அறிஞர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இமாம் தாரமீ[6] ﵀ அவர்கள் இது பற்றிய கருத்துவேறுபாடுகளை எடுத்துக்கூறிவிட்டுப் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: 'என்னைப்

---

6 இமாம் தாரமீ: அபூ முஹம்மது அப்துல்லாஹ் இப்னு அப்துர்ரஹ்மான் அத்தாரமீ என்பதே இவரின் பெயராகும். இவ்வறிஞர் பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார்கள். ஹி.181இல் பிறந்த இவர்களிடம் இமாம்களான முஸ்லிம், அபூ தாவூது, திர்மிதீ போன்றோர் கல்வி கற்றுள்ளமை இவரின் சிறப்பாகும்.

பாடம் 4

மாதவிடாயின் சட்டங்கள்

❀

மாதவிடாய் தொடர்பாக இருபதுக்கும் மேற்பட்ட சட்டதிட்டங்கள் இருப்பினும், அவற்றுள் அவசியப்படும் முக்கியமான சட்டங்கள் மாத்திரமே இங்கு முன்வைக்கப்படுகின்றன.

முதலாவது: தொழுகை

மாதவிடாய் நிலையிலுள்ள பெண்ணின்மீது கடமையான மற்றும் உபரியான அனைத்துவிதத் தொழுகைகளும் தடைசெய்யப் பட்டுள்ளது. அவ்வாறு தொழுதால் ஏற்கப்படமாட்டாது. குறைந்த பட்சம் பரிபூரணமான ஒரு ரக்அத்[41] தொழுமளவு நேரமும், தூய்மையான நிலையிலும் இருந்தாலே தவிர ஒரு பெண் மீது தொழுகை கடமையாகமாட்டாது. (அவ்வாறு ஒரு ரக்அத் தொழும் நேரஅளவு தூய்மை நிலையில் இருந்தால்) அந்நேரத்திற்குரிய தொழுகையை மாத்திரம் நிறைவேற்றுவது கடமையாகும். அது அத்தொழுகைக்குரிய ஆரம்ப நேரமாகவோ அல்லது இறுதி நேரமாகவோ இருக்கலாம்.

அதனடிப்படையில், ஆரம்ப நேரத்தில் மாதவிடாய் ஏற்பட்டதால் தொழுகை கடமையாவதற்குரிய உதாரணம்: சூரியன் மறைந்த பின்பு (மஃரிப் நேரம்) ஒரு ரக்அத் தொழும் நேர அளவிற்குப் பின் மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண், தான் தூய்மையானதன்

---

41 ரக்அத்: தொழுகையில் இஹ்றாம் தக்பீர் சொல்லி ஆரம்பித்ததிலிருந்து பாத்திஹா ஓதியதன் இப்னு ருகூஃ, நடுநிலை, இரு ஸுஜூதுகள், அவ்விரண் டிற்கும் இடையிலான இருப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது ஒரு ரக்அத்தாகும். அவ்வாறு ஸுபஹ் தொழுகையில் 2, ளுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகை களில் 4, மஃரிப் தொழுகையில் 3 ரக்அத்கள் தொழவேண்டும்.

பாடம் 5

தொடர் உதிரப்போக்கும் அதன் சட்டங்களும்

❀

தொடர் உதிரப்போக்கு (இஸ்திஹாழா) இரு வகைப்படும். அவை:

1. மாதம் முழுவதும் தொடராக இரத்தம் வெளியாகிக் கொண்டே இருத்தல்.
2. மாதத்தில் ஓரிரு நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் இரத்தம் வெளியாகிக் கொண்டே இருத்தல்.

முதல் வகைக்குரிய ஆதாரம்:

قَالَتْ فَاطِمَةُ بِنْتُ أَبِي حُبَيْشٍ لِرَسُولِ اللهِ صلى الله عليه وسلم يَا رَسُولَ اللهِ إِنِّي لاَ أَطْهُرُ

நபி ﷺ அவர்களிடம் ஃபாத்திமா பின்த் அபீ ஹுபைஷ் ؓ அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! நான் தூய்மையாகாமலே இருக்கின்றேன்' எனக் கூறினார்கள். (அறிவிப்பு: ஆயிஷா ؓ, புகாரீ 306)

மற்றோர் அறிவிப்பில்:

أُسْتَحَاضُ فَلاَ أَطْهُرُ

'எனக்கு தொடர் உதிரப்போக்கு ஏற்பட்டு தூய்மையாகாமலே இருக்கின்றேன்' எனக் கூறினார்கள். (ஆயிஷா ؓ, புகாரீ 228)

இரண்டாம் வகைக்குரிய ஆதாரம்: ஹம்னா பின்த் ஜஹ்ஷ்[70] ؓ அவர்கள் நபியவர்களிடம் வந்து,

---

70 ஹம்னா பின்த் ஜஹ்ஷ்: இவர், நபியவர்களின் துணைவியரில் ஒருவரான அன்னை ஸைனப் ؓ அவர்களின் சகோதரியாகும். இவருடைய சகோதரர் அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஷும் ؓ ஒரு நபித்தோழராவார். ஆரம்பத்தில் முஸ்அப் இப்னு உமைர் ؓ அவர்களுக்கு துணைவியாக இருந்த இவர், உஹது யுத்தத்தில் அவர் வீர மரணமடைந்த இப்னு தல்ஹா ؓ அவர்களை மணந்து கொண்டார்கள்.

பாடம் 7

மாதவிடாயைத் தடுக்கும், அல்லது வரவழைக்கும் சாதனங்களைப் பயன்படுத்துதல் மற்றும் கருத்தடை அல்லது கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்

❀

மாதவிடாயைத் தடுக்கும் சாதனங்களைப் பயன்படுத்தல்

ஒரு பெண் மாதவிடாயைத் தடுக்கும் சாதனங்களை, பின்வரும் இரண்டு நிபந்தனைகளுடன் பயன்படுத்தலாம்:

1. அதன் மூலம் தனக்கு எவ்விதப் பாதிப்புகளும் ஏற்படாதிருத்தல். அவ்வாறு பாதிப்புகள் ஏதும் ஏற்படலாமென அஞ்சினால் அதனைப் பயன்படுத்த முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا تُلْقُوا بِأَيْدِيكُمْ إِلَى التَّهْلُكَةِ

அழிவின் பக்கம் உங்கள் கைகளைக் கொண்டு செல்லாதீர்கள். (குர்ஆன் 2:195)

மேலும் கூறுகின்றான்:

وَلَا تَقْتُلُوا أَنْفُسَكُمْ

உங்களை நீங்களே கொன்றுவிடாதீர்கள். (குர்ஆன் 4:29)

2. மனைவிக்கு ஏற்படும் மாதவிடாயுடன் கணவனுக்கு ஏதாவது ஒருவகையில் தொடர்பிருந்தால் அவரிடம் அனுமதி பெற வேண்டும்.

உதாரணமாக: விவாகரத்துச் செய்யப்பட்டு மாதவிடாய் அடிப் படையில் இத்தா இருக்கும் ஒரு பெண்ணாக இருந்தால், அப்பெண்

பெண்களின் உதிரப்போக்கு, மாதவிடாய் சட்டங்கள் தொடர்பாக முக்கியமான சில மார்க்கத் தீர்ப்புகள்

❀

1. மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண் தூய்மையாகி, ஃபஜ்ருக்குப் பின் குளித்துவிட்டு, தொழுது, அன்றைய தின நோன்பைப் பூர்த்தி செய்தால் அவள் அவற்றை மீட்டவேண்டுமா?

ரமழான் மாதத்தில் ஒரு பெண் ஃபஜ்ருடைய நேரத்துக்கு ஒரு நிமிடம் முன்னதாக தூய்மையானாலும் அவள் அன்றைய தின நோன்பை நோற்பது கடமையாகும். அவளுடைய நோன்பு செல்லுபடியாகும். அதனை அவள் மீட்டத் தேவையில்லை. ஏனெனில், அவள் ஃபஜ்ருக்குப் பின்னர்தான் குளித்தாலும், சுத்தமான நிலையிலேயே நோன்பு நோற்றிருக்கின்றாள். அதனால், அவளுக்கு எக்குற்றமும் கிடையாது. இது குளிப்புக் கடமையான நிலையிலுள்ள ஓர் ஆண் ஸஹர் உணவை உட்கொண்டு, நோன்புக்காக நிய்யத் வைத்துவிட்டு, ஃபஜ்ருக்குப் பின்பு குளிப்பதைப் போன்றாகும். அவனுடைய நோன்பும் செல்லுபடியாகும்.

இச்சந்தர்ப்பத்தில் பெண்களிடமுள்ள இன்னொரு விசயத்தையும் இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு பெண் நோன்பு நோற்ற நாளில், நோன்பு திறந்த பின்பு, இஷாத் தொழுவதற்கு முன்பு மாதவிடாய் ஏற்பட்டால் அன்றைய தினம் நோற்ற நோன்பு செல்லுபடியற்றது எனச் சிலர் நினைக்கின்றனர். இதற்கு எந்தவோர் அடிப்படையுமில்லை. மாறாக, மஃரிபுக்கு ஒரு வினாடிக்குப் பின்பு மாதவிடாய் ஏற்பட்டாலும் அவள் நோற்று முடித்த நோன்பு பூரணமானதும் செல்லுபடியானதுமாகும்.

2. பிரசவத்தீட்டு (நிஃபாஸ்) வெளியாகிய ஒரு பெண் நாற்பது நாட்களுக்கு முன்னர் தூய்மையானால் அவள் தொழுவதும், நோன்பு நோற்பதும் அவசியமா?